

ஜெப வீரர்கள்
பாடம் 6 மே 9, 2026


"கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால்,
அவரில் அன்புகூருகிறேன். அவர் தமது செவியை எனக்குச்
சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத்
தொழுதுகொள்ளுவேன்." (சங்கீதம் 116:1, 2)



மனிதகுலம் உட்பட அனைத்து உயிரினங்களும், ஒன்றுக்கொன்றுடனும் - அவருடனும் - தொடர்புகொள்ளும் திறனுடன் தேவனால் படைக்கப்பட்டன.




துரதிஷ்டவசமாக, ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த போது, மனிதர்கள் தேவனோடு நேரடியாக தொடர்புகொள்ளும் திறனை இழந்தனர்.

ஆனால் தேவன் நமக்கு ஒரு பரிசை விட்டு சென்றார். அவருடன் தொடர்ந்து உரையாட நம்மை அனுமதிக்கும் ஒரு "தொலைப்பேசி": ஜெபம்.

தானியேல், ஏனோக்கு, மற்றும் மோசே போன்றோர் இந்த வல்லமையான பரிசை பயன்படுத்தலாம் என்பதற்கு மிக சிறந்த உதாரணங்களாய் இருக்கின்றனர்.







**தானியேல்:**

- இக்கட்டான காலங்களில் ஜெபித்தல்
- சரியான நிலையில் நின்று ஜெபித்தல்

**ஏனோக்கு:**

- ஜெப வாழ்க்கை

**மோசே:**

- தேவனோடு பேசுதல்
- பரிந்துபேசும் ஜெபம்



# தானியேல்


# இக்கட்டான காலங்களில் ஜெபித்தல்

"நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி, (*தானியேல் 9:3*)



தேவன் மீது தான் கொண்டிருந்த நம்பிக்கையின் காரணமாக, தானியேல் அறிவாற்றலையும், கனவுகளை விளக்கும் திறனையும், ஞானத்தையும் பெற்றார் (தானி. 1:8, 17, 20). அவன் உயிருக்கும், அவனது நண்பர்களின் உயிருக்கும் ஆபத்து நேர்ந்த போது, அவன் தேவனை நோக்கி ஜெபித்தான் (தானி. 2:17-23). ஜெபம் நிறைந்த வாழ்விற்கு பின், தானியேல் எத்தகைய பண்புகளைப் பெற்றிருந்தார் (தானி. 6:3-5)?

- சிறந்த நிர்வாகி
- நேர்மையானவர்
- கடின உழைப்பாளி
- சுசரிக்க முடியாதது
- நம்பகமானவர்
- கனப்படுத்தப்பட்டார்
- நம்பிக்கை மற்று விசுவாசமுள்ளவர்
- எந்த தவறும் பழக்கமும் இல்லாதவர்



# இக்கட்டான காலங்களில் ஜெபித்தல்

"நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி,"(தானியேல் 9:3)

பரலோகம் தானியேலின் ஜெபத்தை கவனத்துடன் கேட்டது(தானி. 9:20-23; 10:12). இந்த பிணைப்பை முறிப்பதன் மூலமே அவனது எதிரிகளால் அவனுக்கு தீங்கு விளைவிக்க முடியும் (தானி. 6:5-7).





மரண அச்சுறுத்தல் என்ற இந்த புதிய ஆபத்தை எதிர்கொண்ட போதும், தானியேல் தனது ஜெப பழக்கங்களை தொடர்ந்து கடைபிடித்தார்(தானி. 6:10):





அவர் சீராக இருந்தார், தினமும் மூன்று முறை ஜெபம் செய்தார்



அது ஊகிக்கக் கூடியதாகவே இருந்தது – எருசலேமை நோக்கி தன் சாளரத்தை திறந்து கொண்டு இஜபித்தார்



அவருக்கு ஒரு குறிப்பிட்ட பழக்கங்கள் இருந்தன, அவர் முழங்காலிட்டு ஜெபித்தார்



அவர் நன்றி செலுத்துவதிலும் மன்றாடுவதிலும் கவனம் செலுத்தினார்

# சரியான நிலையில் நின்று ஜெபித்தல்

"தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்." (தானியேல் 6:10)



நாம் ஜெபிக்கும் போது, ஒரு நண்பரிடம் பேசுவது போலவே தேவனிடமும் பேசுகிறோம். இருப்பினும், தேவன் நம்மை பேன்றவர் அல்ல, அவரே பிரபஞ்சத்தின் தலைவர்.

இதன் காரணமாக, அவரை தனது சர்வ வல்லமையுள்ள ஆண்டவராக ஏற்றுக்கொண்டு, அவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபிப்பதே தானியேலின் வழக்கமாக இருந்தது.

நாம் எந்த சூழ்நிலையிலும், எந்த நேரத்திலும் தேவனிடம் ஜெபிக்க முடியும் என்பதால், அவ்வாறு செய்வது எப்போதும் சாத்தியமோ அல்லது அவசியமோ அல்ல.

கண்களை மூடிக்கொள்வது நாம் ஜெபத்தில் அதிக கவனம் செலுத்த உதவுகிறது. ஆனால் சில சூழ்நிலைகளில் இது சாத்தியமாவதில்லை (நடத்தல், வாகனம் ஒட்டுதல், முதலியன.)

முக்கியமான விஷயம் என்னவென்றால், நம்முடைய ஜெபங்கள் தேவனுக்கு உரிய மரியாதையுடன் செய்யப்படுவதாகும்.








# சரியான நிலையில் நின்று ஜெபித்தல்

"தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்." (தானியேல் 6:10)

வேதாகமத்தில், தங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு விதங்களில் ஜெபித்தவர்களின் எடுத்துக்காட்டுகளை நாம் காண்கிறோம்.




யோசபாத் ஜனங்களுக்கு முன்பாக நின்று ஜெபித்தார்(2 நாளா. 20:5)



தாவீது நன்றி செலுத்த தேவன் முன் அமர்ந்தார் (2சா. 7:18)



சாலமோன் முழங்காலிட்டு, கைகளை உயர்த்தியவாறு ஜெபித்தார் (1இரா. 8:54)



ஜனங்கள் ஜெபம் செய்ய தரையில் குனிந்து வணங்கினர் (நெகே. 8:6)



தாவீது தன் படுக்கையில் குப்புற விழுந்து ஜெபித்தார் (1இரா. 1:47)




நெகேமியா நின்று, அரசனுக்கு முன்பாக அமைதியாக ஜெபித்தார் (நெகே. 2:1-4)

நமது நிலைப்பாடு எதுவாக இருப்பினும், இடைவிடாமல் ஜெபிக்குமாறும்(1 தெச. 5:17), விடாமுயற்சியுடன் ஜெபிக்குமாறும் (கொலோ. 4:2) மற்றும் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருக்கும்படியும் (ரோ. 12:12) வேதாகமம் நம்மை வலியுறுத்துகிறது.



# ஏனோக்கு

# ஜெப வாழ்க்கை





**"ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்."**
**(ஆதி 5:24)**


ஜலபிரயத்துக்கு முற்பட்ட காலத்து மக்களின் தீமை பெருகிவந்த, மிகவும் கடினமான ஒரு காலகட்டத்தில் ஏனோக்கு வாழ்ந்தார். தன் மகன் பிறந்த போது, தேவனைப் பற்றிய அவரது புரிதல் விரிவடைந்தது, அவருடனான அவரது ஐக்கியமும் மேலும் வலுப்பெற்றது (ஆதி. 5:21-24).

அந்த உறவில் ஜெபம் ஒரு முக்கிய காரணியாக திகழ்கிறது. அவரது பணி எவ்வளவுக்கு எவ்வளவு தீவிரமும் அவசரமும் வாய்ந்ததாக அமைந்ததோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவரது ஜெபங்கள் இடைவிடாதவைகளாகவும் ஆழ்ந்த பக்தி நிறைந்ததாகவும் விளங்கின. சில சமயங்களில், தேவனோடு இன்னும் ஆழமாக ஒன்றிணைவதற்காக அவர் தனிமையான இடங்களுக்கு சென்று ஒதுங்கியிருப்பார். ஆயினும், தேவனைப் பற்றிய தனது அறிவை மக்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக அவர் எப்போதுமே மக்களிடமே திரும்பி வருவார்.



தினசரி வாழ்வின் பரபரப்புகளுக்கு மத்தியிலும், தனித்திருக்கும் அமைதியிலும் தேவன் நம் ஜெபத்தை செவிகொடுத்து கேட்கிறார். அவர் நம்மை காணவோ அல்லது நம் குரலைக் கேட்கவோ இயலாத இடமேதுமில்லை. நாம் நம் ஜெபத்தை சொற்கள் வாயிலாக வெளிப்படுத்தலாம்(அது நம் கவனத்தை ஒருமுகப்படுத்த உதவுகிறது). அல்லது மௌனத்தின் வாயிலாகவும் அதை சமர்பிக்கலாம்(அது நம் எண்ணங்களை வெளிப்படுத்த துணைபுரிகிறது). இதில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், ஜெபத்தின் வாயிலாக தேவனோடு கொள்ளும் தொடர்பை ஒருபோதும் துண்டிக்காமல் இருப்பதே ஆகும்.








# மோசே

# தேவனோடு பேசுதல்

"கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும். (உபாகமம் 34:12)

சீனாய் மலையிலிருந்து தேவனுடைய குரல் ஒலிப்பதை கேட்டபோது, இஸ்ரவேல் ஜனங்கள் அவரே நேரடியாக தங்களோடு மீண்டும் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர். ஏனெனில் அவருடைய குரலினிமித்தம் தாங்கள் இறந்துவிடுவோமோ என்று அவர்கள் அஞ்சினார்கள்(யாத். 20:18-19).





தேவனோடு முகமுகமாக பேசிய மோசேயின் விஷயத்தில் இது அவ்வாறு இருக்கவில்லை (உபா. 34:10). 40 வருடமாக (பட்சிக்கும் முட்செடி முதல் மோசேயின் மரணம் வரை), மோசேயும் தேவனும் தனிப்பட்ட உரையாடலை மேற்கொண்டனர் (யாத். 33:9-11).



தேவன் மோசேயிடம் பரிசுத்த ஸ்தலத்தை கட்டுவது குறித்த குறிப்பிட்ட அறிவுத்தல்களை வழங்கியதாகவும், பல்வேறு சட்டங்களை அவருக்கு தெரிவித்ததாகவும் அமைந்த பல நாற்பது நாள் காலப்பகுதிகளை வேதாகமம் பதிவு செய்துள்ளது. இத்தகைய உரையாடல்களின் போது, மோசே மக்களுக்காக பரிந்து பேசியும் வந்தார்






தேவனிடம் நேருக்கு நேர் பேசும் பாக்கியம் நமக்கு இல்லை. ஆனால், அவருடன் நேரடியாக தொடர்பு கொள்ள அனுமதிப்பதன் மூலம், ஜெபம் அந்த இடைவெளியை நிரப்புகிறது.



# பரிந்து பேசும் ஜெபம்



"ரோன்மேலும் கர்த்தர் மிகவும் கோபங்கொண்டு, அவனை அழிக்கவேண்டும் என்றிருந்தார்; அப்பொழுது ஆரோனுக்காகவும் விண்ணப்பம்பண்ணினேன்." (உபாகமம் 9:20)

பரிந்து பேசும் ஜெபம் என்பது, நாம் பிறருக்காக ஜெபிப்பதாகும் (யாக் 5:16; மத் 5:44; 1 தீமோ 2:1-4).

மோசே பல்வேறு சந்தர்ப்பங்களிலும், வெவ்வேறு காரணங்களுக்காகவும் மற்றவர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசினார்:

★ அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்காக





* ஆரோனின் மகனுக்காக (உபா. 9:20)

* மிரியாமின் முறுமுறுப்புகளுக்காக (எண். 12:10-13)

★ அவருடைய ஜனங்களுக்காக







* அவர்கள் தாகத்தால் தவித்தபோது (யாத். 15:24-25)

* அவர்கள் பசியில் இருந்தபோது (எண். 11:11-13)

* அவர்கள் பாவம் செய்தபோது (யாத். 32:30-32)

மோசேயை மற்றவர்களுக்காக ஜெபிக்க தூண்டியது எது?

நமக்கும் அந்த ஒன்றே உந்து சக்தியாக இருக்க வேண்டும்: நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்கள் மீதான அன்பு.

“நாம் குடும்பச் சூழலில் ஜெபிக்க வேண்டும்; எல்லாவற்றிற்கும் மேலாக, தனிப்பட்ட ஜெபத்தை நாம் ஒருபோதும் புறக்கணிக்கக்கூடாது—ஏனெனில் அதுவே ஆன்மாவின் உயிராதாரமாகும். ஜெபம் புறக்கணிக்கப்படும்போது, ஆன்மா செழித்து வளர்வது சாத்தியமற்றது. குடும்ப ஜெபம் அல்லது பொது ஜெபம் மட்டுமே போதுமானதல்ல. தனிமையில் இருக்கும்போது, ஆன்மா தன்னை இறைவனின் கூர்ந்து நோக்கும் கண்களுக்கு முன்பாக முழுமையாகத் திறந்து காட்ட வேண்டும். தனிப்பட்ட ஜெபமானது, ஜெபத்தைக் கேட்கும் இறைவனால் மட்டுமே கேட்கப்பட வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களின் பாரத்தை, பிறருடைய ஆர்வமிக்க செவிகள் எதுவும் கேட்க அனுமதிக்கப்படக்கூடாது. தனிப்பட்ட ஜெபத்தில், ஆன்மா தன்னைச் சூழ்ந்துள்ள புறத் தாக்கங்களிலிருந்தும், மனக்கிளர்ச்சிகளிலிருந்தும் விடுபட்டு நிற்கிறது. அமைதியாகவும், அதே சமயம் மிகுந்த ஆவலுடனும் அது இறைவனை நோக்கி விரைகிறது. அந்தரங்கத்தில் நடப்பவற்றைக் காணும் இறைவனிடமிருந்தும், இதயத்திலிருந்து எழும் ஜெபத்தைக் கேட்கத் தன் செவிகளைத் திறந்து வைத்திருக்கும் அவரிடமிருந்தும் வெளிப்படும் தாக்கம், இனிமையானதாகவும் என்றும் நிலைத்திருக்கக்கூடியதாகவும் அமையும்.”

எலன் ஜி உவைட் (கிறிஸ்துவினிடத்திற்கு வழி, பக். 98)